**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **கலைச்செல்வி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை, மேடவாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் software engineer ஆக வேலை செய்கிறார். சந்திரசேகரன் எனது அப்பா. பொன்முருகன் எனது தம்பி. எனது அக்கா பெயர் பொன்மலர். எனது அக்கா பொன்மலர் M.Sc., M.Phil, B.Ed படித்துள்ளார். எனது அக்காவிற்கும் தூத்துக்குடி, நாகலாபுரத்தைச் சேர்ந்த ஜெயராம், ஜீவா மகன் ரமேஷ் என்ற காமாட்சி பாண்டியன் என்பவருடன் கடந்த 04.11.2005 அன்று திருமணம் நடந்தது. திருமணத்தின் போது ஆஜர் எதிரி காமாட்சி பாண்டியன் பெங்களூரில் software engineer ஆக வேலை பார்த்துவந்தார். திருமணத்திற்கு பிறகு 1 வருடம் வரை எங்களுக்கு எந்த பிரச்சனை பற்றியும் தெரியவில்லை. எனது அக்காவை ஆஜர் 1 வது எதிரி காசு பணம் கேட்டு அடித்து துன்புறுத்தியுள்ளார். திருமணத்தின்போது எனது அக்காவிற்கு 100 பவுன் நகையும், 1 வது எதிரிக்கு 10 பவுன் நகையும், 2 1/2 கிலோ வெள்ளி பாத்திரங்கள் மற்றும் பணம் ஒரு லட்சம் ரொக்கம் பணம் ஆகியவை கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு எனது அக்கா பொன்மலரும் 1 வது எதிரியும் பெங்களூரில் தனியாக குடியிருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு

எனது அக்காவை காசு, பணம் கேட்டு துன்புறுத்தியும், இது என் வீடு என்று சொல்லியும், எனது அக்காவை தகாத வார்த்தைகளால் திட்டியும் 1 வது எதிரி துன்புறுத்தியுள்ளார். நாங்கள் எனது அக்காவிற்கு செலவிற்கு இங்கு வங்கி கணக்கு ஓபன் செய்ய சொல்லி, அதன் debit card ஐ ஆஜர் 1 வது எதிரி வாங்கி வைத்துக்கொண்டுள்ளார். நாங்கள் எனது அக்காவிற்கு இங்கு போடும் பணத்தை 1 வது எதிரி அவர் எடுத்து வைத்துக்கொள்வார். எனது அக்கா பொன்மலரின் செல்போனை வாங்கி வைத்துக்கொண்டு யாருடனும் பேசவிடமாட்டார். ஒரு மாதத்திற்கு ஒரு முறை எனது அக்காவிடம் பிரச்சனை செய்து இங்கு எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்து, பணம் வாங்கி வரச் சொல்லுவார். நாங்கள் பணம் கொடுத்து அனுப்பிவிடுவோம். ஆஜர் 1 வது எதிரி எனது அக்கா பொன்மலரை கையில் கிடைக்கும் ஷீ போன்ற பொருட்களை கொண்டு எனது அக்காவை அடித்து துன்புறுத்தியுள்ளார். எனது அக்கா எனது பெற்றோர் வீட்டிற்கு வரும்போது எனக்கு போன் செய்து இந்த விபரங்களைச் சொல்லி அழுவார். என்னுடன் தான் எனது அக்கா பொன்மலர் எல்லா விஷயங்களையும் ஷேர் செய்துகொள்வார். எனது அம்மா உடம்பு முடியாமல் இருந்தார். எனது அம்மா மார்பகப்புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்த சமயத்தில் அதற்கான மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு இருந்தார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு எனது அம்மா இறந்துவிட்டார். எனது அக்கா திருமணம் முடிந்த சுமார் 1 1/2 வருடம் கழித்து 1 வது எதிரி மிகவும் பிரச்சனை செய்து எனது அக்காவை எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார். எனது அக்காவை பைக்கில் இருந்து கீழே தள்ளிவிட்டுவிட்டார். அதனால் எனது அக்கா பொன்மலருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. எனது அக்காவின் மருத்துவ சிகிச்சைக்காக எங்கள் வீட்டிற்கு ஆஜர் 1 வது எதிரி அனுப்பிவைத்துவிட்டார். நாங்கள் தான் எனது அக்காவிற்கு மருத்துவ சிகிச்சை செய்தோம். அதற்கான மருத்துவ ஆவணங்களை தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். 1 வது எதிரி மீண்டும் எனது அக்காவுடன் சண்டை போட்டு வீட்டை விட்டு அனுப்பிவிட்டார். அதனால் எனது அக்கா மருந்து குடித்துவிட்டதால் அவரை

பெங்களூரில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அதற்கான மருத்துவ ஆவணங்களையும் நான் தற்போது கொண்டு வந்துள்ளேன். அதற்கு பிறகு 2,3 நாட்கள் கழித்து எனது பெற்றோர் பெங்களூருவிற்கு சென்று எனது அக்கா பொன்மலரை எங்கள் வீட்டிற்கு அழைத்துவந்தார்கள். அதற்கு பிறகு விவாகரத்து கேட்டு எனது அக்கா மதுரை குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். ஆனால் 1 வது எதிரியின் பெற்றோர் எங்கள் வீட்டிற்கு வந்து கேஸை வாபஸ் வாங்க சொல்லி சமாதானம் பேசியதால் எனது அக்கா பொன்மலரை திரும்ப பெங்களூருக்கு 1 வது எதிரியுடன் அனுப்பிவைத்தோம். அதற்கு பிறகும் 1 வது எதிரி கேஸ் வாபஸ் வாங்கிய பிறகும் எனது அக்கா பொன்மலரை அடித்து துன்புறுத்தி எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார். அதனால் மீண்டும் விவாகரத்து கேட்டும், Domestic violence Act ன்படியும் எனது அக்கா கேஸ் போட்டார். விவாகரத்து வழக்கானது Exparty ஆக தீர்ப்பாக எங்களுக்கு வந்துவிட்டது. அதற்கு பிறகு 1 வது எதிரி விவாகரத்து வழக்கினை மேல் முறையீடு செய்தார். விவாகரத்து கொடுக்கமாட்டேன் என்று தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தார். எனது அக்காவிற்கு போன் செய்து யாரையும் நிம்மதியாக இருக்க விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு டார்ச்சர் செய்து கொண்டு இருந்தார். அடுத்தடுத்து மேல்முறையீடு வழக்கு போட்டுக்கொண்டே இருந்தார். எனது அக்கா பொன்மலர் இறப்பதற்கு 40 நாட்களுக்கு முன்பு கோர்ட்டில் இருந்து கவுன்சிலிங் பேச கூப்பிட்டு இருந்தார்கள். அதில் எனது அக்கா எழுதிக்கொடுத்திருந்தார். அதற்கு பிறகு தொடர்ந்து 1 வது எதிரி எங்கள் வீட்டில் இருக்கும் அனைவருக்கும் போன் செய்து டார்ச்சர் செய்துகொண்டே இருந்தார். நாங்கள் செல்போனை சுவிச் ஆப் செய்து வைத்தாலும் லேண்ட் லைனுக்கு போன் செய்து 1 வது எதிரி டார்ச்சர் செய்து கொண்டே இருந்தார். போன் செய்து திட்டுவதும், நாங்கள் போன் எடுக்கவில்லை என்றால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு போன் செய்வதுமாக 1 வது எதிரி டார்ச்சர் செய்து கொண்டு இருந்தார். கடந்த 18.01.2010 அன்று 12.30 மணியளவில் எனது தம்பி எனக்கு போன் செய்து

எனது அக்கா பொன்மலர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் சென்னையில் இருந்து கிளம்பி சாயங்காலம் 05.30 மணிக்கு வந்து சேர்ந்தோம். எனது அம்மா கிச்சனில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது, முன்னாடி இருந்த அறையைப் பூட்டிக்கொண்டு மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டதாக சொன்னார்கள். நான் மறுநாள் மதுரை பெரியாஸ்பத்திரியில் பிணவறையில் வைத்து தான் எனது அக்கா பொன்மலரின் உடலைப் பார்த்தேன். அப்போது போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 1 வது எதிரி போன் செய்து டார்ச்சர் செய்ததாலும், யாரையும் நிம்மதியாக இருக்கவிடமாட்டேன் என்று சொல்லியும் டார்ச்சர் செய்தார். எனது அக்காவை தகாத வார்த்தைகளால் பேசியும், பணம் கேட்டும் 1 வது எதிரி டார்ச்சர் செய்தார். என்னுடன் தான் வாழ வேண்டும் என்றும், விவாகரத்து கொடுக்க மாட்டேன் என்று சொல்லியும், மேலும் மேலும் மேல்முறையீடு செய்து உங்களை கோர்ட்டுக்கு இழுப்பேன் என்று 1 வது எதிரி சொல்லி டார்ச்சர் செய்தததால் எனது அக்கா பொன்மலர் தற்கொலை செய்து கொண்டார். என்னிடம் காட்டப்படும் அதசாஆ.3 ல் உள்ள எழுத்துக்கள் எனது அக்கா பொன்மலரின் எழுத்துக்கள் ஆகும். அதசாஆ.4 நோட்டில் உள்ள எழுத்துக்களும் எனது அக்கா பொன்மலரின் கையெழுத்துக்களாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

பிரிவு 231(2) குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை அசா1,2 குறுக்கு விசாரணைக்குப்பிறகு அசா3 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**எதிரிகள் 2,3,4 தரப்பில் கு.வி.**

எனக்கு 2006 ம் ஆண்டு ஜீலை மாதம் 2 ம் தேதி திருமணம் நடந்தது. எனது திருமணத்திற்கு பிறகு நான் சென்னையில் தான் வசித்து வருகிறேன்.

சம்பவ சமயத்தில் நான் சென்னையில் தான் இருந்தேன். 2,3 எதிரிகள் தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள். பிரச்சனையின் போது சமாதானம் பேசுவதற்கு வருவார்கள். போலிசார் விசாரணையின் போது 2,3 எதிரிகள் பெங்களுருக்கு சமாதானம் பேச வருவார்கள் என்று சொல்லவில்லை. 4 வது எதிரி, 1 வது எதிரியின் பெரியப்பா பையன் ஆவார். 4 வது எதிரி, 1 வது எதிரியின் திருமணத்திற்கு முன்பே திருணம் ஆகி பெங்களுரில் தனியாக வசித்து வருகிறார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திரு. முத்துக்குமார் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகமலைப்புதுக்கோட்டை அருகே, சம்பக்குடி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பிரைவேட் கம்பெனியில் டுவிலர் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி விற்கும் வேலை செய்கிறேன். அசா1 சந்திரசேகர் எனக்கு தொழில் ரீதியாக சுமார் 18 வருடங்கள் பழக்கம். 04.11.2005 ம் தேதி அசா1 ன் மகள் பொன்மலர் என்பவரது கல்யாணத்திற்கு நானும் எனது குடும்பத்தாரும் சென்றிருந்தோம். பொன்மலரை 1 வது எதிரி ரமேஷ் என்பவரக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு 1 வது எதிரியுடன், பொன்மலர் பெங்களூரில் குடியிருந்தார். ஏதோ குடும்ப தகராறு என்று பொன்மலர் அவரது அப்பா அசா1 ன் வீட்டிற்கு வந்திருந்தார். நான் அசா1 ன் வீட்டிற்கு சென்று பார்த்த போது, பொன்மலர் தனது குடும்ப செலவிற்கு கூட 1 வது எதிரி பணம் கொடுப்பதில்லை என்றும், தனக்கு போட்ட நகை போதவில்லை என்று சொல்லி மேலும் நகை, பணம் வாங்கி வரச் சொல்லி வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக என்னிடம் சொன்னார். பொன்மலர் திருமணத்திற்கு பிறகு 1 வருடம் கழித்து வந்திருந்த போது இந்த விபரங்களைச் சொன்னார். பொன்மலர் என்னிடம் மன

வேதனையுடன் சொன்னதை வைத்துத்தான் எனக்குத் தெரியும். அதற்கு பிறகு நான், அவரது அப்பா அசா1 ஆகியோர் இருந்து சமாதானம் பேசி பொன்மலரை அனுப்பிவைத்தோம். அங்கு போய் 4,5 மாதங்கள் நன்றாகத்தான் இருந்தார்கள். அதன் பிறகு பொன்மலர் மீண்டும் குடும்ப பிரச்சனை ஆகி தூக்கமாத்திரை சாப்பிட்டுவிட்டதாகவும், அதனால் பெங்களுரில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதன் பிறகு பொன்மலரின் அப்பாவிடம் விசாரிக்கலாம் என்று அவரது வீட்டிற்கு போயிருந்தேன். அப்போது பொன்மலர் விவாகரத்து கேட்டு மதுரை கோட்டில் அப்பீல் போக போகிறேன் என்று பேசிக்கொண்டு இருந்தார். விவாகரத்து வழக்கை கோர்ட்டில் பதிவு செய்துவிட்டதாக சொன்னார். 1 வது எதிரி ரமேஷ் தரப்பில் இருந்து அவரது வீட்டில் இருந்து ஆட்கள் வந்து, கோர்ட்டில் கேஸ் வேண்டாம் என்றும், கேசை வாபஸ் வாங்கச் சொல்லியும் பேசினார்கள். நான் வாரா வாராம் அசா1 ன் வீட்டிற்கு தொழில் ரீதியாக செல்வது வழக்கம். அவ்வாறு சென்றபோது, 1 வது எதிரி வீட்டில் இருந்து ஆட்கள் வந்து சமாதானம் பேசினார்கள். எனது தரப்பில் இருந்து, நான் பொன்மலரை அனுப்பிவைக்க சொல்லியும், சின்ன சின்ன பிரச்சனைகள் குடும்பத்தில் வருவது சகஜம்தான் என்று சொல்லியும், பொன்மலரை அனுப்பி வைக்குமாறு அசா1 இடம் சொன்னேன். அதற்கு பிறகு அவர்களுக்குள்ளேயே பேசி சமாதனம் ஆகி பொன்மலரை அனுப்பிவைத்தார்கள். அதற்கு பிறகு எனக்கு தகவலாகத்தான் சொன்னார்கள். தொழில் ரீதீயாக நான் அசா1 இடம் பேசும்போது, பொன்மலர் பற்றி கேட்டபோது, நன்றாக இருப்பதாக சொன்னார். மீண்டும் சில நாட்கள் கழித்து அசா1 இடம் நான் பேசிய போது, தான் தனது மகளை அழைத்து வரப்போவகவும், மீண்டும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டதாகவும், அதனால் விவாகரத்து வாங்கப்போகதாகவும் சொன்னார். நான் எனது தரப்பில் நீங்கள் பாருங்கள் சார் என்று சொல்லி முடித்துவிட்டேன். பிறகு எனது நண்பர்கள் வட்டாரத்தில் இருந்து எனக்கு போன் வந்தது. பொன்மலர் 18.01.2010 அன்று தனது வீட்டில்

மண்ணெண்ணெய் ஊற்றி பற்றவைத்துக்கொண்டதாக சொன்னார்கள். நான் அன்று வேலை விஷயமாக வெளியூரில் இருந்ததால் மறுநாள் 19.01.2010 அன்று மார்ச்சுவரியில் சென்று பொன்மலரைப் பார்த்தேன். அன்று என்னை போலிசார் விசாரித்தார்கள். மறுநாள் RDO அவர்களும் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் பற்றி சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்..

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பிள்ளை இனத்தை சேர்ந்தவர். சைக்கிள் ஸ்டான்ட் என்பது சைக்கிளின் உதிரி பாகங்களில் ஒன்றாகும். நான் அசா1 க்கு சைக்கிள் உதிரி பாகங்களை சப்ளை செய்கிறேனா என்றால் நான் அசா1 இடம் இருந்து தான் சைக்கிள் ஸ்டான்டுகளை வாங்குவேன். சுமார் 18,19 வருடங்களாக அசா1 உடன் வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 நாடார் வகுப்பை சேர்ந்தவர். கீரைத்துறை, மகாலிப்பட்டி மற்றும் மதுரையில் பல இடங்களில் நாடார் வகுப்பைச் சேர்ந்த வியாபாரிகள் நிறையபேர் உண்டு. தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்திற்கு நான் வியாபார ரீதியாக சென்றுள்ளேன். 1 வது எதிரி ரமேஷ் என்பவரின் வீடு, அவர்கள் எப்படி வசதியுடன் இருக்கிறார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். போலிசார் விசாரணையின்போதும், RDO விசாரணையின் போதும், 1 வது எதிரி பற்றிய விபரங்கள் கேட்டார்கள். நான் சொன்னேன். பொன்மலர் மற்றும் 1 வது எதிரியின் திருமண ஏற்பாடுகளை நான் இருந்து செய்யவில்லை. திருமணத்திற்கு முன்பு, திருமண நிச்சயதார்த்தம் நடந்ததா என்று சரியாக ஞாபகம் இல்லை. திருமணம் எங்கு நடந்தது என்றால் மதுரையில் தான் நடந்தது. எங்கு என்று தெரியாது. நான் 1 வது எதிரிக்கும், இறந்த பொன்மலருக்கும் இடையே நடந்த சண்டை சச்சரவுகள் பற்றி அசா1 சொல்லித்தான் தெரியும். திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து இறந்த பொன்மலர் பெங்களூர் சென்றார் என்று சரியாகத் தெரியாது. முதன்முதலில் பெங்களூருக்கு சென்ற பொன்மலர் எந்த தேதி, மாதம், வருடம் திரும்பி வந்தார் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. போலிசார்

விசாரணையின் போதும், RDO விசாரணையின் போதும், திருமணத்திற்கு பிறகு 1 வது எதிரியுடன், பொன்மலர் பெங்களுரில் குடியிருந்தார் என்றும் ஏதோ குடும்ப தகராறு என்று பொன்மலர் அவரது அப்பா அசா1 ன் வீட்டிற்கு வந்திருந்தார் என்றும், நான் அசா1 ன் வீட்டிற்கு சென்று பார்த்த போது, பொன்மலர் தனது குடும்ப செலவிற்கு கூட 1 வது எதிரி பணம் கொடுப்பதில்லை என்றும், தனக்கு போட்ட நகை போதவில்லை என்று சொல்லி மேலும் நகை, பணம் வாங்கி வரச் சொல்லி வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக என்னிடம் சொன்னார் என்றும் சொல்லியுள்ளேன். அதேபோல், பொன்மலர் திருமணத்திற்கு பிறகு 1 வருடம் கழித்து வந்திருந்த போது இந்த விபரங்களைச் சொன்னார் என்றும் பொன்மலர் என்னிடம் மன வேதனையுடன் சொன்னதை வைத்துத்தான் எனக்குத் தெரியும் என்றும் அதற்கு பிறகு நான், அவரது அப்பா அசா1 ஆகியோர் இருந்து சமாதானம் பேசி பொன்மலரை அனுப்பிவைத்தோம் என்றும் அங்கு போய் 4,5 மாதங்கள் நன்றாகத்தான் இருந்தார்கள் என்றும் அதன் பிறகு பொன்மலர் மீண்டும் குடும்ப பிரச்சனை ஆகி தூக்கமாத்திரை சாப்பிட்டுவிட்டதாகவும், அதனால் பெங்களுரில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன் என்றும் அதன் பிறகு பொன்மலரின் அப்பாவிடம் விசாரிக்கலாம் என்று அவரது வீட்டிற்கு போயிருந்தேன் என்றும் அப்போது பொன்மலர் விவாகரத்து கேட்டு மதுரை கோட்டில் அப்பீல் போக போகிறேன் என்று பேசிக்கொண்டு இருந்தார் என்றும் விவாகரத்து வழக்கை கோர்ட்டில் பதிவு செய்துவிட்டதாக சொன்னார். 1 வது எதிரி ரமேஷ் தரப்பில் இருந்து அவரது வீட்டில் இருந்து ஆட்கள் வந்து, கோர்ட்டில் கேஸ் வேண்டாம் என்றும், கேசை வாபஸ் வாங்கச் சொல்லியும் பேசினார்கள் என்றும் நான் வாரா வாராம் அசா1 ன் வீட்டிற்கு தொழில் ரீதியாக செல்வது வழக்கம் என்றும் அவ்வாறு சென்றபோது, 1 வது எதிரி வீட்டில் இருந்து ஆட்கள் வந்து சமாதானம் பேசினார்கள் என்றும் எனது தரப்பில் இருந்து, நான் பொன்மலரை அனுப்பிவைக்க சொல்லியும், சின்ன சின்ன பிரச்சனைகள் குடும்பத்தில் வருவது சகஜம்தான் என்று சொல்லியும்,

பொன்மலரை அனுப்பி வைக்குமாறு அசா1 இடம் சொன்னேன் என்றும் அதற்கு பிறகு அவர்களுக்குள்ளேயே பேசி சமாதனம் ஆகி பொன்மலரை அனுப்பிவைத்தார்கள் என்றும் அதற்கு பிறகு எனக்கு தகவலாகத்தான் சொன்னார்கள். தொழில் ரீதீயாக நான் அசா1 இடம் பேசும்போது, பொன்மலர் பற்றி கேட்டபோது, நன்றாக இருப்பதாக சொன்னார் என்றும் மீண்டும் சில நாட்கள் கழித்து அசா1 இடம் நான் பேசிய போது, தான் தனது மகளை அழைத்து வரப்போவகவும், மீண்டும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டதாகவும், அதனால் விவாகரத்து வாங்கப்போகதாகவும் சொன்னார் என்றும் நான் எனது தரப்பில் நீங்கள் பாருங்கள் சார் என்று சொல்லி முடித்துவிட்டேன் என்றும் போலிசார் மற்றும் RDO விசாரணையிலும் சொல்லியுளேன். RDO பிரேத விசாரணை செய்த போது, பஞ்சாயத்தார்களில் ஒருவராக நானும் இருந்தேனா என்று எனக்குத் தெரியாது. 19ம் தேதி என்னை RDO விசாரணை செய்த போது, என்னிடம் வாக்குமூலம் வாங்கி அதில் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொன்னதை எழுதி அதில் கையொப்பம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் என்னைத் தவிர வேறு யாரும் கையொப்பம் வாங்கினார்களா என்று எனக்குத் தெரியாது. RDO என்னை விசாரணை செய்த பிறகு, போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் RDO விசாரிக்கு பிறகு என்னை வேறு யாரும் விசாரணை செய்யவில்லை. போலிசார் என்னை என்று, எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் மார்ச்சுவரியில் வைத்து விசாரணை செய்தார்கள். 19.01.2010 அன்று விசாரணை செய்தார்கள். நேரம் காலை சுமார் 10.30, 11.00 மணி இருக்கும். அந்த ஒரு முறை விசாரணை செய்த பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. போலிசார் விசாரணையில், மேற்படி ரமேஷ் என்ற காமாட்சி software engineer ஆக பெங்களுரில் வேலை பார்த்து வந்ததால் பொன்மலர் அவரது கணவருடன் பெங்களுரில் வசித்து வந்தார் என்றும், ஒரு வருடம் கழித்து தன் கணவர் கொடுமைப்படுத்துவதாகவும், வரதட்சணை கேட்பதாகவும் சொல்லி வந்துவிட்டார் என்றும், நாங்கள் சமாதானம் சொல்லி திரும்பி அனுப்பிவைத்தோம் என்றும், பின்னர் 6 மாதம்

கழித்து மேற்படி ரமேஷ் என்ற காமாட்சி பாண்டியனின் கொடுமை தாங்காமல் தூக்கமாத்திரை சாப்பிட்டு, தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்த விபரம் தெரிந்து மேற்படி சந்திரசேகர் தன் மகள் பொன்மலரை இங்கு கூட்டிவந்துவிட்ட விபரம் தெரியும் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். கேஸ் போட்டது, அது எவ்வாறு முடிவானது என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. நான் சமாதானம் பேசியது எந்த தேதியில், எந்த மாதம், எந்த வருடம் எங்கு வைத்து பேசினேன் என்றால் அசா1 சந்திரசேகர் வீட்டில் வைத்து பேசினோம். தேதி, மாதம், வருடம் தெரியாது. சமாதனாம் பேசும்போது, வீட்டிற்கு உள்ளே 1 வது எதிரி அவரது குடும்பத்தார்கள் இருந்தார்கள். நான் வீட்டிற்கு வெளியே இருந்தேன். என்னுடன் எனது ஆட்கள் யாரும் இருந்தார்களா என்று தெரியாது. அதேபோல், அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்றும், என்ன முடிவானது என்றும் எனக்குத் தெரியாது. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. சாட்சி வேண்டும் என்பதற்காக அசா1 என்னை சாட்சியாக போட்டு, தற்போது அசா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் 2,3,4, தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | திரு. பாலகுரு |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது, கோசாகுளம்புதூரில் குடியிருந்து வருகிறேன். சைக்கிள் ஸ்டான்டு இரும்பு வியாபாரம் சுமார் 10 வருடங்களாக செய்துவருகிறேன். அசா1 சந்திரசேகரை தெரியும். அவருடன் இரும்பு வியாபாரம் சம்பந்தமாக பழக்கம். அசா1ன் மகள் மலர் என்பவரை ரமேஷ் என்பவரை திருமணம் செய்து கொடுத்தார்கள். எந்த வருடம் திருமணம் நடந்தது என்று தெரியாது. பெங்களுரில் கட்டிக்கொடுத்தார். அங்கு வரதட்சணை கொடுமை என்று சொன்னார்கள். கல்யாணத்தில் இருந்தே பிரச்சனை இருந்துள்ளது. பாப்பா தான் என்னிடம் சொன்னது. அசா1ன் வீட்டில் தான் வைத்திருந்தார்கள். கல்யாணம் ஆகி ஒருவருடம் கழித்து சொன்னார். அதற்கு பிறகு சமாதானம் செய்து மலரை அனுப்பிவிட்டார்கள். அங்கு தூக்கமாத்திரை சாப்பிட்டு அப்பலோ மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். பிறகு சௌகரியம் ஆனதும் அசா1ன் வீட்டிற்கு கூட்டிவந்துவிட்டார்கள். மறுபடியும், இந்த பிள்ளை மிகவும் டாச்சர் ஆகி இருந்துள்ளது. அந்த பிள்ளையை வீட்டிற்கு கூட்டிவந்து விட்டபிறகும், டார்ச்சர் செய்துள்ளார்கள். அந்த பிள்ளை மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டது. இது

தான் நடந்தது. அசா1 எனக்கு போன் செய்தார். நான் வீட்டிற்கு சென்று பார்த்தேன். எரிந்து கிடந்தது. அதன் பிறகு ஆஸ்பத்திரிக்கு போனோம். பிறகு பெரியாஸ்பத்திரிக்கு போனோம். அங்கு போலிசார் ஸ்டேட்மெண்ட் வாங்கினார்கள். பிறகு கலெக்டர் அபிஸ்க்கு போனோம். அங்கும் ஸ்டேட்மெண்ட் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் கு.வி.**

போலிசார் இறந்துபோன அன்றே மதியம் சுமார் 12.30 மணிக்கு பெரியாஸ்பத்திரியில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் நான் சொன்ன விபரங்களை எழுதிக்கொண்டார்கள். போலிசார் எழுக்கொண்டதில் நான் கையெழுத்து போட்டேன். நான் நாயுடு வகுப்பை சேர்ந்தவர். அசா1 சந்திரசேகர் நாடார் வகுப்பை சேர்ந்தவர். அசா1, இரும்பு என்னிடம் வாங்குவார் என்றால் சரியல்ல. நான் அசா1 இடம் இருந்து இரும்பு வாங்கி சுமார் 10 வருடங்களாக வியாபாரம் செய்கிறேன். அது தான் எனக்கு பிழைப்பு ஆகும். எங்கள் ஏரியாவில் நாடார் மகாஜன் சங்கம் உள்ளது பற்றி எனக்குத் தெரியாது. நான் வசிப்பதும், தொழில் செய்வதும் கோசாகுளம் ஆகும். மகாலிபட்டிக்கும் கோசாகுளத்திற்கும் இடையே ரெம்ப தூரம். சரக்கு போகும் போது அசா1 சொல்லித்தான் எனக்கு மேலே சொன்ன விபரங்கள் பற்றி தெரியும். எனக்கு, அசா1, அவரது குடும்பத்தாரை நன்கு தெரியும். அசா1 க்கு 2 மகள்கள். அசா1 ன், 2 வது மகள் பெயர் தெரியாது. 18.01.2010 ம் தேதிக்கு முன்பு நான் அசா1 ன் வீட்டிற்கு சென்றிருக்கேனா என்றால் கல்யாணத்திற்கு சென்றுள்ளேன். அதன் பிறகும் அடிக்கடி அசா1 ன் வீட்டிற்கு போயுள்ளேன். அதனால் அசா1 ன் வீடு பற்றி நன்கு தெரியும். அசா1 ன் குடும்பமும், நானும் நன்கு பழகியுள்ளோம். 18.01.2010 ம் தேதி இறந்த பொன்மலர் தீவைத்துக்கொண்டது பற்றி அன்று மதியம் 12.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது போன் அடித்து சொன்னார்கள். நான் உடனே அசா1 ன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் அசா1 ன் வீட்டிற்கு சென்ற போது, போலிசார் அங்கு இருந்தார்கள். அங்கு போலிசார், அசா1

சந்திரசேகர், அவரது வீட்டார் மற்றும் என்னிடம் என்ன நடந்தது என்பது பற்றி என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அவ்வாறு விசாரணை செய்த போது, நான் சொன்ன விபரங்களை எழுதிக்கொண்டார்கள். நான் அதில் கையொப்பம் போட்டேன். நான் அசா1 ன் வீட்டிற்கு போன போது, இறந்த பொன்மலரை மாலை எல்லாம் போட்டு வைத்திருக்கவில்லை. எரிந்த நிலையில் பிளாட்டாக கிடந்தது. பொன்மலரின் அப்பா, அம்மா அங்கு இருந்தார்கள். நான் சென்று பார்த்த போது பொன்மலரின் உடலை ரூமில் பார்த்தேன். அங்கு 2 ரூம் உள்ளது. அசா1 ன் வீடு கிழக்கு பார்த்த வீடு. அசா1 ன் வீட்டிற்குள் நுழைந்தவுடன் இடது பக்கம் ஒரு அறை உள்ளது. அந்த அறையில் தான் இறந்த பொன்மலரின் பிரேதத்தை பார்த்தேன். அசா1 ன் வீட்டில் நான் இருந்த போது, போலிசார் அந்த இடத்தைப் பார்த்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். கல்யாணம் ஆகி பொன்மலர் எப்போது பெங்களுருக்கு சென்றார் என்றும் எப்போது திரும்பி வந்தார் என்றும் தேதி, மாதம், வருடம் எனக்குத் தெரியாது. போலிசார் விசாரணையிலும், RDO விசாரணையிலும் கல்யாணத்தில் இருந்தே பிரச்சனை இருந்துள்ளது என்றும் பாப்பா தான் என்னிடம் சொன்னது என்றும் அசா1 ன் வீட்டில் தான் வைத்திருந்தார்கள் என்றும் கல்யாணம் ஆகி ஒருவருடம் கழித்து சொன்னார் என்றும் சொல்லியுள்ளேன். சமாதானம் பேசியது எங்கு வைத்து பேசப்பட்டது என்று RDO விசாரணையின் போதும், போலிசார் விசாரணையின் போதும் சொன்னேனா என்றால் வீட்டில் வைத்து சமாதானம் பேசினோம் என்று சொல்லவில்லை. சமாதானம் பேசும்போது நானும் தான் இருந்தேன். சமாதானம் பேசும்போது இரண்டு தரப்பிலும் ஆட்கள் இருந்து பேசப்படும். அதற்கு ஒரு தலைவர் இருப்பார். அந்த சமாதானம் பேசும்போது சந்திரசேகர் தான் தலைவராக இருந்தார். அசா1 சந்திரசேகர் சார்பாகத்தான் நான் சென்றிருந்தேன். சமாதானம் பேசும் போது அங்கு வேறு யார் யார் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. சமாதானம் பேசியதில், அசா1 ஐ தவிர நாடார் இனத்தை சேர்ந்த வேறுயாரும் இல்லை. அசா1 மட்டும் தான்

இருந்தார். சமாதனாம் பேசிய தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அசா1 தொழில் முறையில் எனக்கு வேண்டியவர் என்பதால் சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை சாட்சியாக போட்டு அசா1 சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் 2,3,4 தரப்பில் கு.வி.</u>**

1 வது எதிரியின் அப்பா, அம்மாவைத் தெரியாது. 1 வது எதிரியின் உறவினர்களையும் தெரியாது. 4 வது எதிரியைத் தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை